ஊரில் இருந்திருந்தும்கூட, அந்த ஆஸ்பத்திரியில் இப்பொழுது பார்த்தாலுங்கூட ஒரு புத்தகக் கடை வைத்திருப்பது தெரியும். அதிலிருந்து ஓரணு, இரண்டணு விலையுள்ள புத்தகங்களைக் கட்டாயமாக நோயாளிகள் வாங்கவேண்டியிருக்கிறது. அதுவும் தவிர, அங்குள்ள கிறிஸ்தவ நோயாளிகள் மட்டுமல்லாமல், எல்லா நோயாளிகளையும் சேர்த்துவைத்து, தினந்தோறும் மதபோதனை செய்யப்படுகிறது. இதைப் பரிசீலனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : புத்தகம் அங்கே வைத்திருக்கலாம் தரும உண்டி வைத்திருப்பதுபோல. தரும உண்டியில் இஷ்டப்பட்டவர்கள் போடலாம். கட்டாயம் இல்லை. 'கம்பல்ஷன்' என்பதைக் கனம் அங்கத்தினர் வற்புறுத்திச் சொல்கிறுர். அப்படி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அப்படியிருந்தால் அவர் அதைத் தெரிவித்தால், பரிசீலிக்கலாம்.

Thambikottai Channel

* 1577 Q.—SRI R. SRINIVASA IYER (on behalf of SRI A. R. MARIMUTHU) : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பட்டுக்கோட்டை வட்டத்திலுள்ள தம்பிக்கோட்டை கிராமத்திற்கு நீர்ப்பாசன வசதியளிக்கும் தம்பிக்கோட்டை கால்வாய் (பாமனி ஆற்றிலிருந்து பிரிவது) எப்போது பழுது செய்யப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Proposals for effecting repairs and improvements to the Thambikottai channel are under examination by the Chief Engineer (Irrigation) in consultation with the Collector of Thanjavur.

SRI R. SRINIVASA IYER : தம்பிக்கோட்டை வாய்க்கால் பாமனியாற்றிலிருந்து பிரிந்து கன்னுறைற்றுக்குக் குறுக்கே கீழ்க் குமிழி வழியாகச் சென்று தம்பிக்கோட்டையிலுள்ள சுமார் முன்னூறு ஏக்கராவுக்குப் பயன்பட்டுக்கொண்டிருந்தது. அந்தக் கீழ்க் குமிழி உடைந்து முப்பது, நாற்பது வருஷங்கள் ஆகின்றன. பிரதம இன்ஜினீர் அவர்கள் அதைப் பார்த்து ரிப்பேருக்கு உத்திரவிட்டு ஏறக்குறைய ஆறு மாதங்கள் இருக்க லாம். தம்பிக்கோட்டைக் கால்வாய் அபிவிருத்தி வேலையைத் துரிதப்படுத்தி நல்ல முறையில் அதன் மூலம் பாசனம் ஏற்படு வதற்கு வகை செய்ய சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கடைசியாக வந்தத் தகவலின்படி, இது கலெக்டரின் பரிசீலனையில் இருக்கிறது. அவரிடமிருந்து தகவல் வந்ததும் இந்த திட்டத்தை எடுத்துக் கொள்ளவேண்டும். கனம் அங்கத்தினர் அவர்கள் தஞ்சாவூர் போகும்போது அவரே கலெக்டரைப் பார்த்து சீக்கிரத்தில் அனுப்பும்படிச் சொல்லலாம்.